**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 328/2021**

2024- ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19– ஆம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW1 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாமிநாதன் | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | சிதம்பரம் | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | மூங்கில்பாடி | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 66/2024 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை** :– (தொடர்ச்சி)

1) தாவா சொத்திற்கு வடது புறம் எனக்கு இடம் உள்ளது என்றால் சரிதான். அதில் பாதியில் வீடு கட்டியுள்ளேன். பாதி இடம் காலியாக உள்ளது என்றால் சரிதான். அதன் சர்வே எண் தெரியுமா என்றால் 397/1 ஆகும். மேற்படி இடம் எனது பூர்வீக இடம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 397/1–ன் பழைய சர்வே எண். 158 என்றால் சரிதான். மேற்படி சொத்தை 1961 ஆம் ஆண்டு எனது அம்மா செல்வத்தம்மாள் என்பவர் பெரியசாமி மூப்பனாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படுவது மேற்படி பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2) மேற்படி சர்வே நம்பரின் மற்றொரு பாதியை வாதியின் அப்பாவிடமிருந்து எனது அம்மா கிரயம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது இடத்திற்கு தெற்கு பகுதியில் 307/2A–ல் வாதிக்கு வீடு உள்ளது என்றால் சரிதான். வாதியின் வீட்டிற்கு வடக்கு பகுதியில் ரமேஷ் என்பவரிடமிருந்து வாதி கிரயம் பெற்று சர்வே எண். 307/2B2 என சப்டிவிஷன் செய்து பாதையாக அனுபவித்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண். 307/2B2 தவறாக சப்டிவிஷன் செய்யப்பட்டுள்ளது என்று நான் மாவட்ட ஆட்சியர் அல்லது வருவாய் துறையினரிடம் மனு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வாதி கட்டியிருந்த வீட்டை இடித்துவிட்டோம் என்றால் இல்லை. அவர்கள் தான் என்னுடைய இடத்தில் சுவர் கட்டியுள்ளார்கள். எனக்கும், வாதிக்கும் ஒரு முச்சலிக்கா ஏற்பட்டுள்ளதா என்றால் ஆமாம். மேற்படி முச்சலிக்காவின்படி நாங்கள் இரண்டு தரப்பினரும் நடந்துக் கொள்ளவில்லை என்றால் நான் முச்சலிக்காபடி தான் நடந்துக் கொண்டுள்ளேன்.

3) நான் முச்சலிக்காப்படி நடந்துக் கொள்ளாததால் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3–ன்படி வாதி அவர்களது இடத்தை சப்டிவிஷன்படி அளந்து முறையாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

30.01.2014 ஆம் தேதி சர்வேயர் வந்து அளந்தது குறித்து நான் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஆட்சேபணை தெரிவித்திருந்தேன். நான் ஆட்சேபணை செய்ததற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் வாய்மொழியாக சர்வேயரிடம் ஆட்சேபணை தெரிவித்தேன். நான் என்னுடைய இடத்தை மீண்டும் அளப்பதற்கு சர்வேயரிடம் பணம் கட்டினேனா என்றால் கட்டியுள்ளேன்.

4) அதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் அடாவடியான ஆள் என்பதால் தான் சர்வேயர் நட்ட அளவு கல்லை பிடுங்கி எறிந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது அம்மா பெயரில் கிரயம் பெற்றுள்ளதால் உண்மையான பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் தெரியவந்துவிடும் என்பதால் தான் அதை மறைத்து பொய் அளித்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தவறாக வழங்கப்பட்ட பட்டாவை வைத்து நான் தவறாக கட்சி செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி தாவா வீட்டையும், பாதையையும் வருவாய் துறையினரிடம் மனு கொடுத்து சப்டிவிஷன் செய்து சரியான முறையில் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

5) நான் வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் வாதி இடைஞ்சல் செய்ததாக நான் ஏதேனும் தனியாக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எனக்கு இடம் ஏதும் இல்லை என்றாலும் வாதி போட்ட வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல. எனக்கு கிரய பத்திரப்படி தான் இடம் என்றாலும் பட்டாபடி இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCourt,Kunnam